**அக்கரைப்பற்று பிரதேச சபை - 2023**

**----------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அக்கரைப்பற்று பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கரைப்பற்று பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அப்பிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் 1.6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| உள்ளுராட்சித் திணைக்களத்தினால் 2022 ஆம் ஆண்டில் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டி ரூபா 284,659 பெறுமதியும், 06 வகையான தளபாட உபகரணங்கள் மற்றும் லினோவோ டெப் ஒன்று என்பவற்றின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான நிதிகூற்றுக்கள் தயாரிக்கும் போது சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனைத்து பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 202,351 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் | மீளளிக்கப்படாத வருமானங்களை அரச வருமானத்திற்கு மாற்றுவதற்கு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571(1),(2), (3) | தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,558,104 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,516,767 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 200,000 | 78,580 | 78,580 | - | 50,000 | 150,000 | 150,000 | - |
| (ii) | வாடகை | 3,650,000 | 3,852,770 | 3,852,770 | - | 3,850,000 | 3,522,969 | 3,661,974 | - |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,625,000 | 582,400 | 582,400 | - | 600,000 | 469,450 | 469,450 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 5,440,000 | 5,397,576 | 5,397,576 | - | 4,395,000 | 494,657 | 494,657 | - |
| | கூட்டுத் தொகை | 10,915,000 | 9,911,326 | 9,911,326 | - | 8,895,000 | 4,637,076 | 4,776,081 | - |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| இசங்கனிச்சீமையில் அமைந்துள்ள 02 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையானது மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் ரூபா 220,000 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இதற்கான சிறந்த ஆலோசனை எமது மேல்அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டு வருமான வழிகளை பெற நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகைக்கு வழங்கி வருமானத்தினை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சேதனைப் பசளை உற்பத்தி நிலையத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போதிய ஆளணியினர்கள் காணப்பட்டிராத போதிலும் திண்மக்கழிவுகளை அரைக்கும் இயந்திரமொன்று 2022 ஆம் ஆண்டில் ரூபா 969,500 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், இன்றுவரை பயன்பாடின்றி காணப்பட்டிருந்தது. | அக்கரைப்பற்று மாநகர சபையின் சேதனப் பசளை நிலையத்தில் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டது. நிலையம் அண்மைக்காலத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | மாநகர சபையிடமிருந்து வருமானம் பெற்றிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 07 வகையான உழவு இயந்திரங்களினை வயல் நிலங்களை உழுவுவதற்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இதனை விவசாய செயற்பாட்டிற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் உழைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 முதல் 2023 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் காசு கையிருப்பாக ரூபா 9,406,484 தொகை காணப்பட்டிருந்தும், குறித்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை மேற்கொள்வதற்கு தேவையான தொகை தவிர்ந்த மிகுதி கையிருப்பு மீதியினை சபைக்கு வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடிய மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் இந் நிதியினை பயன்படுத்தி வருமானம் உழைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வருமானம் பெற்றுக் கொள்ளக்கூடிய மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கடந்த மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதியில் மக்களிடமிருந்து 27 நீரிணைப்பிற்கான வீதி அகழ்வுக் கட்டணமாக அறவிட்ட ரூபா 133,500 தொகை மீளச் செலுத்தப்படாமலும் வீதிகள் புனரமைக்கப்படாமலும் காணப்படுகின்றது. | இனம்காணப்பட்ட வீதிகள் சீர் செய்யப்பட்டுள்ளது. சில வீதிகளினை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வீதிகளினை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் பழுதடைந்து காணப்பட்டிருந்தும் அவற்றினை திருத்தம்செய்து மீளப்பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல திருத்த வேலைகளையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் PSDG நிதித் திட்டத்தின் கீழ் திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைகளுக்காக ரூபா 500,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட திண்மக்கழிவகற்றல் வாளிகள் இதுவரை உரிய தரப்பினருக்கு விநியோகிக்கப்படாது களஞ்சிய அறையில் பயன்பாடற்று காணப்பட்டிருந்தது. | இதனை எதிர்காலத்தில் வியாபார உத்தரவுப் பத்திரம் பெறும் போது வழங்க தீர்மானிக்கப்பட்டு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. | உரிய நோக்கம் அடைவதற்கான நடவடிக்கையினை துரிதப்படுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளத்தக்க வகையில் சபையினால் இலக்குகளுக்கான குறிகாட்டிகளை உருவாக்கி பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையில் இவ்வாண்டு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது. | உரிய நோக்கத்தினை அடைய குறிகாட்டிகளை உருவாக்கி அதன் பிரகாரம் நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |